ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ரூ.2.26 கோடி மதிப்பீட்டிலான 33 வாகனங்களின் சேவையை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு,ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, துணை மேயர் வி.செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் ஜானகி, மாநகர பொறியாளர் விஜயகுமார், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அனைத்துத் துறை அலுவலர்களுடன் – அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு!

கோவை, ஜூலை 12-

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 08.07.2023 அன்று மாவட்டத்தில் செயல் படுத்தப் பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா, மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் (பொ) / மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் செல்வம், தூய்மைப் பணியாளர் நலவாரிய மாநில துணைத் தலைவர் திருமதி. கனிமொழி பத்மநாபன், வருவாய் கோட்டாட்சியர் (வடக்கு) கோவிந்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.மு. கோகிலா, தனித் துணை ஆட்சியர் / சமூக பாதுகாப்புத்திட்டம் சுரேஷ், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பார்த்திபன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) துவாரகநாத்சிங், மாவட்ட வழங்கல் அலுவலர் குணசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கமலகண்ணன், மாநகராட்சி துணை ஆணையாளர் சிவக் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்த தாவது : -

முதலமைச்சர் அவர்கள் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள். நம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை, அப்பணிகளை விரைந்து முடிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தேவையான புதிய திட்டப்பணிகள் உள்ளிட்டவைகள் குறித்து அனைத்து துறைசார்ந்த அலுவலர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் அலுவலர்களின் கருத்துக்களும், கோரிக்கைகளும் கேட்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களிடம் வந்து கோரிக்கை வைக்கும்போது அவர்களின் நியாமான பொது கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப்பணிகள் முன்னேற்ற நிலைகள் குறித்து மாதம் ஒரு முறை அந்தந்த துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மக்களின் பொதுவான விரைந்து தீர்க்கக்கூடிய சிறிய பிரச்சினைகளுக்கான கோரிக்கை களுக்கு அரசு அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

வால்பாறையில் அதிக மழை பெய்ததால் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மழையினால் தண்ணீர் அதிகமானஅளவு வந்தாலும் எவ்வித ஆபத்தும் இல்லாதவகையில், அதனை சரிசெய்யும் அளவிற்கு தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீட்டுவசதி வாரியம் சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. வீட்டு உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்கள் கொண்டு வரும் போது விரைந்து வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம் மற்ற அனைத்து மாவட்டங்களைவிட வளர்ச்சி அடைந்த மாவட்டமாக உள்ளது. ஒரு மாவட்டம் முன்னேற்ற மடையவேண்டும் என்றால் அரசுத் துறையில் பணியாளர்கள் முதல் உயர் அலுவலர்கள் வரை அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நிச்சயமாக நன்றாக வளர்ச்சி அடையமுடியும். புதிய திட்டங்களை கொண்டு வருவதற்காக அனைத்து அரசுத்துறை களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் நேற்று முன்தினம் (10.07.2023) நடைபெற்ற 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவிகளுக்கு மருத்துவர் பட்டங்களை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மணி ஆகியோர் உள்ளனர்.

4,89,600 மாணவ – மாணவிகளுக்கு

ரூ.235.92 கோடி மதிப்பில் மிதிவண்டி வழங்கும் திட்டம்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 12 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூபாய் 235.92 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ,மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்குக்கும் தமிழ்நாடு அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2022 - 2023 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவ - மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் (10.07.2023) சென்னை, திருவல்லிக்கேணி, பெசன்ட் சாலையில் அமைந்துள்ள என்.கே.தி. தேசிய பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூபாய் 235.92 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயின்ற 4,89,600 மாணவ மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ் குமார், பள்ளிக் கல்வி துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி. லட்சுமி பிரியா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் புதிய அறங்காவலர் குழு உறுப்பினர்கள்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்டனர்!

அரியலூர், ஜூலை 12 -

அரியலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் புதிய மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

இந்து அறநிலையத்துறையின் சார்பில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இக்குழுவில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக ராஜேந்திரனும் குழு உறுப்பினர்களாக தங்கவேல், பானுமதி, பாண்டியன், இளங்கோவன் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

பொறுப்பேற்றுக் கொண்ட உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்து அறநிலையத்துறை உதவி ஆணையர் நாகராஜ், தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) கலைவாணன், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/0291-1/2023

இரு உறை குறுகிய கால முறையில்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 6ல் ஸ்டீபன் ரோட்டில் வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் பம்ப் மற்றும் மின்சார ஏற்பாட்டுடன் மழைநீர் தொட்டி அமைக்கும் பணி	ரூ. 211.57	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 20.07.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3559 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

சேலத்தில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு

மாணவ - மாணவியர்களுக்கு மருத்துவர் பட்டங்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சேலம். ஜூலை 12-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் தலைமையில் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (10.07.2023) நடைபெற்றது. பின்னர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் பயிலும் மாணவ, மாணவிகளின் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை களின் உட்கட்டமைப்பிற்காக நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 28வது இளங்கலை மருத்துவப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்லூரியில் 100 மாணவ, மாணவிகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 95 மாணவ, மாணவிகள் மருத்துவர் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.35 கோடி செலவில் செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டடமும், ரூ.80 இலட்சம் செலவில் நவீன நரம்பியல் அறுவைச் சிகிச்சைக்கான உபகரணங்களும், ரூ.5 கோடி மதிப்பீட்டிலான நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய முழு உடல் பரிசோதனை மையப் விரைவில் துவங்கப் படவுள்ளன.

மேலும், சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகிவற்றிற்குத் தேவையான படுக்கை வசதி, ஆய்வுக் கூடங்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மற்றும் புதிய கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, இக்கல்லூரியின் மாணவ, மாணவிகளின் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமென கோரிக்கை வரப்பெற்றுள்ளது. இதுகுறித்து ஒன்றிய அமைச்சரிடம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் கூடுதலாக மாணவ, மாணவிகள் சேர்க்கைக்கான இடம் குறித்தும், அடுத்த ஆண்டுக்குள் கூடுதலாக 50 எண்ணிக்கையிலான இடங்களை அதிகரிக்கப்பதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமெனவும் கோரிக்கை வைக்கவுள்ளோம். அதற்கான போதிய மருத்துவக் கட்டமைப்புகள் மற்றும் பேராசிரியர்கள் இங்கு உள்ளனர். இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மணி, மருத்துவக் கண்காணிப்பாளர் மரு. தனபால், துணை முதல்வர் மரு.தேன்மொழி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1 /0291 /2023

இரு உறை குறுகிய கால முறையில்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 6ல் ஸ்டீபன் ரோட்டில் உள்ள கூக்ஸ் ரோடு முதல் ஓட்டேரி நல்லா வரை மழைநீர் தேங்குவதை தடுக்க மழைநீர் வடிகால் அமைக்கும் பணி	ரூ. 190.52	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 20.07.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 21.07.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3558 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கீழகாவதுகுடி ஊராட்சி, பிலாவடிமூலை கிராமத்தில் புதிய பொது வினியோக நியாய விலைக்கடை கட்டிடத்தை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய தலைவர் புலிவலம் ஏ.தேவா மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கறம்பக்குடி தெற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பாக தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், கறம்பக்குடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தவ.பாஞ்சாலன் வரவேற்புரையிலும் வெட்டன்விடுதியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திர சேகரன், பி.டி.அரசக்குமார், அரு.வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஷ்வரி, க.மதியழகன், எம்.லியாகத்அலி, சுப.சரவணன், சு.சண்முகம், ஆ.செந்தில், வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மழையூர் ராமசாமி, கமலா செல்வம், கலைஞர்.மு.கருணாநிதி, வடவாளம் க.செ.மணிமாறன், அன்சாரி பாஷீத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.